சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : சித்திரக்கலை

வாரம் : மார்ச் 04

தரம் : 09

தொகுப்பு : செல்வி.S.லுக்ஷனி
இ/நிவி/ஹவுப்பே த.வி

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : | **பல்வேறுப்பட்ட ஊடகங்களைப் பயன்படுத்திச் சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைச் செய்வார்.** |
| **தேர்ச்சி மட்டம்** | : | **அப்புதல், பொளிதல், ஒருங்கிணைத்தல் திறன்களைப் பயன்படுத்திப் பல்வேறு வகையான சிற்பங்களை வடிவமைப்பார்.** |
| **செயற்பாடு** | : | **களிமண் ஊடகத்தைக் கொண்டு விலங்குருவங்களை ஒருங்கிணைப்போம்.** |
| **ஒப்படை** | : | **பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுக.** |

01. உங்கள் வீட்டிலுள்ள அல்லது இணையத்தளம், தொலைக்காட்சி போன்ற கட்புல ஊடகங்களை பாவித்து காணொலி அல்லது நிழற்படங்கள் என்பவற்றை பார்வையிட்டு விலங்குருக்கள் அல்லது விலங்குச் சிற்பங்கள் என்பவற்றை நன்கு பார்வையிடுங்கள்.

02. நீங்கள் பார்வையிட்ட காணொலி அல்லது நிழற்படத்தினை நன்கு அவதானிப்பதனூடாக, விலங்குருவின் உடலமைப்பு, அதன் முன்பக்கத் தோற்றம், பக்கத் தோற்றம், பின்பக்கத் தோற்றம், ஊடகப்பயன்பாடு, முப்பரிமாணம் என்பவற்றை நன்கு அவதானித்து அறிந்துக் கொண்டு, நீங்கள் விரும்பிய விலங்கொன்றின் எளிமையான உடல் நிலையொன்றைத் தெரிவு செய்து அதனை வரைந்துக் கொள்ளுங்கள்.

03. 15**cm X** 12**cm** அளவுடைய மரப்பலகைத் துண்டொன்றினைப் பெற்றுக் கொள்ளுங்கள், மரப்பலகை மீது களி மண்ணை பதப்படுத்திக்கொள்க. ஆதாரப்பலகை மீது பதப்படுத்திய களிமண் பகுதிகளை வைத்து நீங்கள் வரைந்துக் கொண்ட பரும்படிப் படத்தில் உள்ள விதத்தில் விலங்குருவத்தை கட்டியெழுப்புக.

04. நீங்கள் வடிவமைத்துக் கொண்ட பகுதியை பொருத்தமான கருவிகளை உபயோகித்து நுட்பமான பகுதிகளை வடிவமைத்துக்கொள்க. (பெரியோர்களின் உதவியை பெற்றுக் கொள்க.)

05 நீங்கள் நிர்மாணித்த சிற்பத்தினை மேற்பரப்புத் தன்மை பலவிதத்தில் வெளிப்படுமாறு சிற்பத்தை வடிவமைத்துக்கொள்க. நீர்த்தன்மையான வர்ணங்களை உபயோகித்து நிறந்தீட்டுக.